<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செய்யார், திருவண்ணாமலை மாவட்டம்</u>

முன்னிலை - திரு. எம். ஜெய்சங்கர், எம்.எ.,பி.எல்.,
நீதித்துறை நடுவர், செய்யார்.
(முழு கூடுதல் பொறுப்பு)

2018ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8ஆம் நாள் திங்கள்கிழமை
திருவள்ளுவராண்டு 2049, ஸ்ரீ ஹேவிளம்பி வருடம் மார்கழித் திங்கள் 24ம் நாள்

<u>ஆண்டுப்பட்டிகை வழக்கு எண் 1/2018</u>

அரசுக்காக -
காவல் உதவி ஆய்வாளர்,
பெரணமல்லூர் காவல் நிலையம்
குற்ற எண் 465/2017. ... குற்றமுறையிடுபவர்

**/ எதிர் /**

1. பீபாத்குமார், வயது 29,
   த/பெ பிசோதாய்,
   பிஜல்பூர் பஜிகர்சியா தாலுக்கா,
   சார்சா மாவட்டம், பீகார் மாநிலம்.

2. சனோஜ்குமார், வயது 25,
   த/பெ சுரேஷ்மண்டால்,
   ரகுநாத்பூர், திருவேணிசாத் தாலுக்கா,
   ஜிலாசிபவுல் மாவட்டம், பீகார் மாநிலம். ... எதிரிகள்

இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தில் 5.1.18ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு குற்றமுறையிடுபவர் தரப்பில் அரசு வழக்கறிஞர் நிலை-1 அவர்கள் ஆஜராகியும், எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. ம.பா. சீதாராமன், அவர்கள் ஆஜராகியும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து விசாரணை முடித்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

<u>**தீர்ப்புரை**</u>

எதிரிகள் இருவரும் நண்பர்களாக பழகி பொன் நகைகள் மற்றும் வெள்ளி நகைகளுக்கு பாலீஸ் போடும் தொழில் செய்து வந்ததாகவும், முதல் எதிரி பாதி அளவு தமிழ் தெரிந்ததால் 1,2 எதிரிகள் இருவரும் தமிழ்நாட்டிற்கு வந்து பாலீஸ் போடும் தொழில் செய்து வந்ததாகவும், சம்பவ தினமான 18.12.17ம் தேதி மாலை 17.00 மணிக்கு நாவல்பாக்கம் கிராமத்தில் சாட்சி 1 பூபதி அவரது வீட்டினிடம் இருந்தபோது எதிரிகள் இருவரும் சாட்சி 1க்கு நஷ்டத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற உட்கருத்துடனும் திருடவேண்டும் என்ற எண்ணத்துடனும் பாலீஸ் போட்டு

தருவதாக கூறி சாட்சி 1 இடம் இருந்து இரண்டு சவரன் தங்க செயினை வாங்கி திராவகத்தை ஊற்றி திருடு முயற்சி செய்துள்ளதாகவும், எனவே எதிரிகள் இதச பிரிவுகள் 379, 511ன் கீழ் மோரணம் காவல் நிலைய உதவி ஆய்வாளர் இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2.எதிரிகள் இந்நீதிமன்றத்தில் அழைப்பாணையின் பேரில் ஆஜரானதும், அவர்களுக்கு இவ்வழக்காவணங்களின் நகல்கள் யாவும் குவிமுச பிரிவு 207ன் படி இலவசமாக வழங்கப்பட்டு போதிய கால அவகாசம் கொடுத்த பின்னர் எதிரிகள் மீதான இதச பிரிவுகள் 379, 511ன் கீழான குற்றச்சாட்டுகள் பற்றி விளக்கிக் கூறி வினவியபோது எதிரிகள் தங்கள் மீதான குற்றச்சாட்டு களை ஒப்புக்கொண்டனர்.

3. மறுக்கப்படாத எதிரிகள் தரப்பு குற்ற ஒப்புதல் மனுவின் அடிப்படையில் எதிரிகளின் மீதான இதச பிரிவுகள் 379, 511ன் கீழான குற்றச்சாட்டு அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதாக இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எதிரிகள் தங்கள் மீதான குற்றச் சாட்டை ஒப்புக்கொண்டதால் சாட்சிகள் 1 முதல் 7 வரையிலானவர்களை விசாரிக்க தேவை இல்லை என அரசு தரப்பில் வழக்கறிஞர் மேற்குறிப்பு செய்துள்ளார். அரசு தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் ஏதும் குறியீடு செய்யப்படவில்லை.

4. மறுக்கப்படாத எதிரிகள் தரப்பு குற்ற ஒப்புதல் மனுவின் அடிப்படையில் எதிரியின் மீதான இதச பிரிவுகள் 379, 511ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதாக இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

5. எதிரிகள் இதச பிரிவுகள் 379, 511ன் கீழ் குற்றவாளிகள் என தீர்மானித்து எதிரிகளுக்கு இதச பிரிவு 379ன் கீழான குற்றத்திற்கு தலா ரூ.100/- அபராதம் விதித்தும், அபராதம் கட்டத் தவறினால் 1 மாதம் மெய்க்காவல் சிறைத்தண்டனை விதித்தும், இதச பிரிவு 511ன் கீழான குற்றத்திற்கு தலா ரூ.100/- அபராதம் விதித்தும், அபராதம் கட்டத்தவறினால் 1 மாதம் மெய்க் காவல் சிறைத்தண்டனை விதித்தும், மேற்படி பிரிவுகளுக்கு எதிரிகளுக்கு ஏற்கனவே சிறையில் இருந்த காலமான 19.12.17 முதல் 8.1.18 வரை 21 நாட்கள் குவிமுச 428ன் கீழ் கழித்தும் உத்தரவிடப்படுகிறது. மொத்த அபராத தொகை ரூ.400/-.

5.<u>சொத்து பற்றிய உத்தரவு</u>

இவ்வழக்கில் வழக்குச் சொத்துக்கள் எதுவும் உத்தரவிற்கில்லை.

இத்தீர்ப்பானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு பின்னர் 2018ம் ஆண்டு ஜனவரி திங்கள் 8ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
செய்யார்.
(முழு கூடுதல் பொறுப்பு).

<u>அரசுத்தரப்பு சாட்சிகள்</u>

இல்லை

<u>அரசுத்தரப்பு சான்றாவணங்கள்</u>

இல்லை

<u>சான்று பொருட்கள்</u>

இல்லை

<u>எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றவாணங்கள்.</u>

இல்லை.

நீதித்துறை நடுவர்,
செய்யார்.
(முழு கூடுதல் பொறுப்பு).